விலை ரூபா: [illegible] பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பி.ஜே.பர்னாண்டோ
இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 10 சனிக்கிழமை (22.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 65

## அரச இராணுவபலம் குன்றியுள்ளது

# பொலிஸ் - காவல்துறை
# இணைந்த படை அவசியம்!

## கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெவ்டே

(நமது சிறப்பு நிருபர்)

*** ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்பு விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்ற எதிரணியினரின் கோரிக்கை சமாதான முயற்சிகளுக்கு பங்கம் விளைவிக்கும்**

*** இலங்கையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இலங்கைப் பொலிஸாரையும் விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல்துறையினரையும் இணைத்து நன்கு பயிற்றப்பட்ட பொலிஸ் படையொன்றை உருவாக்குவது அவசியமாகும்.**

**இவ்வாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியுறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.**

அரசிற்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாவதை அடுத்து இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே நேற்று நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இராணுவ சமபலம் வேண்டும்

அரசும்-தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை இன்றுடன் ஒரு வருடத்தை பூர்த்தியடைய விருப்பதால் அந்த உடன்படிக்கையை மேலும் உறுதிப் படுத்துவதற்கு இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் சமபலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

கடந்த இரண்டு தசாப்தகாலமாகப் கொழுந்து விட்டு எரிந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தொடர் சமாதானப் பேச்சு வார்த்தையின் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு முன்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட

(10ம்பக்கம் பார்க்க)

## இன்று 10மணிவரை யாழ்.குடாநாடு ஸ்தம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு வருடமாகியும் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதிப் படுத்தப்படாமைக்கு அதிருப்தி தெரிவித்து இன்று காலை 10மணி

(10ம்பக்கம் பார்க்க)

## ஒஸ்ரின்–கருணா சந்திப்புக்கு கண்காணிப்புக் குழு ஏற்பாடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பொர்னாணடோவுக்கும், புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணாவுக்குமிடையிலேயான முக்கிய சந்திப்பு ஒன்று கிழக்கில் நடைபெறவுள்ளது.

இதனை விரைவாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மேற்கொண்டு வருகிறது.

மட்டக்களப்பு வவுணதீவு கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இம்மாதம் முடிவுக்குள் இச் சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் 30ம் திகதி ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும், கருணாவுக்குமிடையிலேயான சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றம், யுத்த நிறுத்த மீறல் தொடர்பான முறைப்பாடுகள், முஸ்லிம் தரப்புப் பிரச்சினைகள் குறித்து இச் சந்திப்பில் பிரதானமாக ஆராயப் படவுள்ளன.

இதேவேளை அடுத்த மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ள 6ம் சுற்று பேச்சுக்கு முன்னதாக மேற்குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் டியுற்றர் ரோல்கிசன் தெரிவித்துள்ளார். (உ-8)

## திருமண வீட்டில் உணவருந்திய 12பேருக்கு வாந்திபேதி
### சாவகச்சேரி கச்சாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கச்சாய்ப் பகுதியில் திருமண வீடொன்றில் உணவருந்திய 12 பேர் வாந்தி மற்றும் வயிற்றோட்டத்தினால் மிகவும் பாதிப்படைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் இச் சம்பவம் இடம்பெற்றது. திருமண வீட்டில் உணவருந்தியதால் ஏற்பட்ட வாந்தி பேதியை அடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 12 பேரும் நேற்றிரவு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் இவர்களில் சிலர் மயக்கமுற்ற நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-6)

## புலிகள் கைது செய்த பொலிஸ் தமிழீழ நீதிமன்றில் ஆஜர்

(கிளிநொச்சி)

முகமாலையில் தமிழீழ விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த போது புலிகளால் கைது செய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று கிளிநொச்சியிலுள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 14ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதியாளர் மணியரசன் உத்தரவிட்டார்.

(10ம்பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று உரையாற்றுவார்

(கொழும்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இன்றிரவு 9.30 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

இன்றிரவு 9.30மணிமுதல் 10.30 மணிவரை இடம்பெறவுள்ள பிரதமரின் உரை நாட்டில் உள்ள சகல தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் ஒளிபரப்பப்படவுள்ளது. (வ)

## நெல் கொண்டுசெல்ல தடை இல்லை

(கிளிநொச்சி)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளி இடங்களுக்கு நெல் எடுத்துச் செல்வதற்கு எதுவித கட்டுப்பாடும் இல்லையென புலிகளின் வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு நெல்லினை எடுத்துச் செல்லமுடியாதென வெளியான செய்தி பொய்யானதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந)

## அரசு-புலிகள் உடன்படிக்கையை நீக்கும்வரை எதிர்ப்போம்
## ஜே.வி.பி செயலர் சபதம்

(கொழும்பு)

இலங்கை அரசும்-தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட உடன்படிக்கை நீக்கப்படும்வரை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அரசு திட்டமிட்டு பொலிஸார் மூலம் கொடூரமான முறையில் கலைத்த சம்பவத்தைக் கண்டித்து ரில்வின் சில்வா நேற்று பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; அமைதியான முறையில் தாம் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் அரசாங்கத்தின் உத்தரவை அடுத்து மிகக் கொடூரமான முறையில் பொலிஸாரினால் கலைக்கப்பட்டது. இச் செயல் மூலம் கூட்டங்கள் நடத்தக் கூடிய மனித உரிமையை அரசாங்கம் அழித்துவிட்டது.

இச் சம்பவம் தொடர்பாக செய்திகளை திரட்ட வந்திருந்த பல ஊடகவியலாளர்களும் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தனர். இச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விஷேட அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அரசிடம் கோரிக்கை விட்டிருந்த போதும் அரசு அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (வ)

## முல்லைத்தீவில் உயிரிழந்த படையினருக்கு
## கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்திய பொலிஸார்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக வன்னிக்கு வருகை தந்துள்ள அம்பாறை பொலிஸ் அணியினர் 1996ம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் போது கொல்லப்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் எரியூட்டப்பட்ட இடத்திற்குச் சென்று கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

அம்பாறை பொலிஸ் அணியினருடன் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நேற்றுக் காலை கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இதன்போது முல்லைத் தீவில் படையினருக்கு ஏற்பட்ட

(10ம்பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# CRICKET WORLD CUP 2003




# பங்களாதேஷை வென்றது வரலாற்றுச் சாதனை

## கனடா அணித்தலைவர் ஜோய் ஹரிஸ்


தென்னாபிரிக்க அணித்தலைவர் ஷோண் பொலக்

பல குறைபாடுகளுடன் எவ்வித வசதியும் அற்ற நிலையில் உலகக் கிண்ணப் போட்டிகளில் நாம் பங்கு பற்றுகிறோம். ஆயினும் எமது உறவினர்களினதும், நண்பர்களினதும், ரசிகப் பெருமக்களினதும் ஆவலான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற இறுதிவரை போராடுகிறோம். உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் ரெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற, அனுபவம் வாய்ந்த வீரர்களைக் கொண்ட பங்களா தேஷ் அணியை வென்றது ஒரு வரலாற்றுச் சாதனை என்றார் ஜோய் ஹரிஸ்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுகின்ற அனைத்து நாடுகளும் தம்மையும் தமது நாட்டையும் பரபரப்பாக்கிக் கொண்டிருந்த நேரத்தில் அதாவது தமது பயிற்சிகளை தீவிரமாக மேற்கொண்டிருந்த வேளையில் கனடா அணியினராகிய நாம் துடுப்பாட்ட மட்டைகளைப் பிடிப்பதற்குப் பதிலாக பனி அகற்றும் இயந்திரங்களையும், சவல்களையும் பிடித்துக் கொண்டிருந்தோம். கடும்பனி காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் நாம் எந்தவொரு பயிற்சியிலோ அல்லது போட்டிகளிலோ பங்குபற்றவில்லை. இரு வாரங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்கா நோக்கி பயணமாகும் எமது நாட்டின் வெப்பநிலை மறைப் பெறுமானத்தில் (-20°C) ஆக காணப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் கிரிக்கற்றையே தொழிலாக கொண்ட அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் நாம் ஆடுகின்றமை எமக்கு ஒரு சாதகமான சூழ்நிலையல்ல என்றார்.

பலம்வாய்த அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா போன்ற அணிகள் பல போட்டித் தொடர்களில் விளையாடிய அனுபவத்தோடு போதிய பயிற்சிகளோடு தென்னாபிரிக்கா நோக்கி பயணமாகிய வேளையில், கனடா அணியினராகிய நாம் கடந்த 25ம் திகதி வடஅமெரிக்காவிலிருந்து தென்னாபிரிக்காவில் வந்திறங்கினோம். ஹரிஸ் மேலும் கூறுகையில், எமது அணி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து, கனடாவில் கிரிக்கெற் பிரபல்யம் அடையத் தொடங்கியுள்ளது. .இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவது ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்றார்.

இவ்வாறன நிலையில் இருந்தும் கூட பங்களாதேஷ் அணியுடனான முதலாவது ஆட்டத்தில் 60 ஓட்டங்களால் நாம் பெரு வெற்றி கண்டோம். கென்யா அணியுடனான ஆட்டத்தில் இறுதிவரை வெற்றிக்காக போராடி தோற்றதையிட்டு பெருமைபபடுகின்றோம் என்றார் ஹரிஸ். இலங்கை அணியுடனான ஆட்டம் துரதிஷ்டவசமானது. அவர்களைப் போன்ற பந்து வீச்சாளர்களை நாம் இதுவரை எதிர்கொண்டதில்லை. சாதனை நிலைநாட்டாது தடுக்க நாம் போராடினோம் ஆயினும் இரு ஓட்டங்களால் அது கைக்கூடாமல போய்விட்டது. இனிவரும் ஆட்டங்களில் அவ்வாறான துர்பாக்கிய நிலை தோன்றாது நாம் பார்த்துக் கொள்வோம் என்றார் கனேடிய அணித்தலைவர் ஜோய் ஹரிஸ்.

(55)




### இன்றைய ஆட்டம்

**இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான்**
(கேப்டவுண் மைதானம்)
2.00 P.M

**தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ்**
(ப்ளூம் பொண்டேன் மைதானம்)
2.00 P.M

## சொந்த மண்ணில் விளையாடும்

# தென்னாபிரிக்கா சுப்பர் சிக்ஸிக்கு தகுதி பெறுமா?

இப் பகுதியில் ஆரம்பத்தில் பிரஸ்தாபித்தது போல் குழு 'பி' யில் எவ்வணிகள் சுப்பர் சிக்ஸ்க்குள நுழையும் என்று யாராலும் கூற முடியாத நிலை தோன்றியுள்ளது. தென்னாபிரிக்கா, நியூசிலாந்தை எதிர்த்தாடிய போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றியீட்டியதன் மூலம் தென்னாபிரிக்கா மேலும் இக் கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதுவரை பங்குபற்றிய உலகக் கிண்ணப் போட்டிகளில் சுப்பர் சிக்ஸ்க்கு முன்னேறிய தென்னாபிரிக்கா அணி இவ்வாண்டு தனது சொந்த மண்ணில் ஆடிக்கொண்டிருக்கும் உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறுமா என்ற தர்மசங்கட நிலை தோன்றியுள்ளது

இந் நிலையில் ஹேசல் கிப்ஸ், அலன்டொனால்ட், ஜொண்டி றூட்ஸ் ஆகிய சிரேஷ்ட வீரர்கள், ஊழலில் சிக்குண்ட மறைந்த தலைவர் ஹான்சி குறோஞ்சியை போல தற்போதைய தலைவர் ஷோண் பொலக்கின் தலைமைத்துவம் சிறப்பாக அமையவில்லை எனக் குறைகூறிவருகின்றனர். அணியில் இவ்வாறான பிளவுகள் ஏற்படின் அணியின் முன்னேற்றத்தில் தடங்கல் ஏற்படுமென கிரிக்கெற் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அனைத்து வீரர்களும் அணித்தலைவர்களுடன் சேர்ந்து செயற்பட வேண்டுமென தென்னாபிரிக்க கிரிக்கெற் சங்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்ததிலிருந்து இது புலப்படுகிறது.

மிகச் சுலபமாக சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறவேண்டிய நியூசிலாந்து அணி கென்யாவுடனான ஆட்டத்தை ஆடாத காரணத்தால் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறுமா என்ற நிலை உருவாகியுள்ளது. விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ள இலங்கை அணி இனிவரும் மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய அணிகளுடனான போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றாலும் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெற்று விடும். மேற்கிந்திய தீவுகள் அணி, பங்களாதேஷ் அணியை எதிர்த்து ஆடிய போட்டியில் மழை குறுக்கிட்டதால் 2 புள்ளிகளை மட்டுமே பெற முடிந்தது. இலங்கை அணியை அது வெல்லும் பட்சத்தில் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறும்.

எது எவ்வாறாயினும் இலங்கை அணியுடனான போட்டியில் தென்னாபிரிக்கா தோற்கும் பட்சத்தில் மற்றைய மூன்று அணிகளும் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறும். தென்னாபிரிக்கா வெல்லும் பட்சத்தில் இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் வென்றால் இலங்கை அணியும், தோற்றால் மேற்கிந்திய தீவுகள் அணியும் தகுதி பெறுமென நம்பப்படுகிறது.

இவ்வகையில் இனி நடைபெறவிருக்கும் இலங்கை எதிர் மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை எதிர் தென்னாபிரிக்கா ஆகிய ஆட்டங்கள் கிரிக்கெற் ரசிகர் மத்தியில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. யார் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறுவார்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

(த-55)

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

**வலம்புரி**

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ----------
முகவரி : ----------
தே.அ.அ.இல : ----------
கையொப்பம்: ----------
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003


### சமாதான ஓராண்டுப் பூர்த்தியில்

# அரசியல் கட்சிகள் ஒன்றுபடுதலை பிரதமர் ரணில் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

**அரசாங்கப் பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் முக்கிய கூட்டங்களை சந்திக்க வேண்டிய நிலை இனிமேல் தான் உள்ளது.**

**இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள இராணுவத்தினரை அகற்றுதல் சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல், தமிழீழ விடுதலை புலிகளின் வசமுள்ள ஆயுதங்களைக் களைதல் போன்ற மிக முக்கிய விடையங்கள் சம்பந்தமாக இனிவரும் பேச்சுவார்த்தைகளிலேயே ஆராயப்படவுள்ளன.**



இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர், இருதரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்து முடிந்த 5 ஆம் கட்டப் பேச்சு வார்த்தை வரையிலான முடிவுகள் யாவும் முன்னேற்றகரமானதாக உள்ளன.

நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ மேலும் பல வருடங்கள் எடுக்கும்.

சமாதானப் பேச்சுவார்ததைகளில் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் போது பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் முன்னேற்றம் காணப்படவேண்டும் என உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

வெளிநாடுகள் வழங்கவுள்ள 500 மில்லியன் டொலர் நிதியுதவியின் மூலமே வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் மீளக் கட்டியெழுப்பப் படவுள்ளன.

நாடு பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வேண்டுமானால் நல்லதோர் தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு இன மத மொழி வேறுபாடற்ற அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)




சமாதான தினம் நேற்று குடாநாட்டுப் பாடசாலைகளில் அனுட்டிக்கப்பட்டது. படங்கள் க.பவன்

### வீரவன்ச எழுப்பிய வினாவால் வந்தது வினை!

## பாராளுமன்றத்தில் நேற்று அமளிதுமளி

# சபை நடவழக்கைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட அமளிதுமளி காரணமாக சபை நடவடிக்கைகள் 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் எழுப்பிய வாய் மொழி மூலமான கேள்வி ஒன்றினை அடுத்தே சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பு ஊர்வலத்திற்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தே விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

அவ்வேளையில் பாராளுமன்ற அமர்வுளுக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீஅந்திரா கென்னடி சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி இவ்வாறான கருத்துக்களை கூற காலம் நேரம் ஒதுக்க முடியாது எனக் கடுமையாகக் கூறினார்.

இதனை அடுத்து மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் ஆளும் கட்சிக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

அத்துடன் மேற்படி கட்சியின் உறுப்பினர் ஒருவர் பதாதை ஒன்றை ஏந்தி வந்து சபை நடுவே அமர்ந்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் அரச தரப்பில் அமர்ந்திருந்த உறுப்பினர் ஒருவர் புத்தகமொன்றை மக்கள் விடுதலை முன்னணியின் சபை நடுவில் அமர்ந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் மீது வீசினார்.

இதனைத் தொடர்ந்து அரசாங்கக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்கும் இடையில் பாராளுமன்றத்தில் ஏற்பட இருந்த கலகத்தை அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, பந்துல குணவர்த்தன ஆகியோர் தடுத்து நிறுத்தினர்.

அவ்வேளையில் பாராளுமன்ற பார்வையாளர்கள் அரங்கில் இருந்த பாடசாலை மாணவர்களை பொலிஸார் வெளியேற்றினர்.

15 நிமிடங்களின் பின்னர் சகல அமர்வுகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டன. (உ-8)

### வீடமைப்பு அபிவிருத்தி

# நிதி க்கூட்டுத் தாபனம் வங்கியாக தரமுயரும்

(கொழும்பு)

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் வங்கியாக தரமுயர்த்தப்படவுள்ளது.

இது தொடர்பான திருத்தங்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வீடமைப்புப் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானால் சமாப்பிக்கப்பட்டது.

இதனை சமர்ப்பித்து அங்கு உரையாற்றிய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், தமக்கென குடியிருப்புக்களை உருவாக்கிக்கொள்ளும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அதிக வீட்டுக் கடன்களை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இவ்வாறு வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தை வங்கியாக தரமுயர்த்துவதன் மூலம் வருடாந்தம் வழங்கப்படும் கடன்களை 100 சதவீதத்தால் அதிகரிக்க முடியும் என்றார். (உ-10)

### பிரச்சினைகள் பல....

(09ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி முயற்சியில் வேகம் குறைந்து விட்டிருக்கிறது. நோர்வீஜியன்பிரதி வெளிநாட்டமைச்சர் விடார் ஹெல்ஹிஸன் இதை ஒப்புக் கொண்டுள்ளார்.

"கடந்த மாதம் ஒஸ்லோவில் நடந்த மாநாட்டுடன் பார்த்தால் இது ஒரு குறிப்பிடக்கூடிய மகாநாடு இல்லை. ஆனால் வரலாறு உருவாகி வருகிறது. இதற்கு ஆக்க பூர்வமான கடின உழைப்பு நிறைய தேவைப் படுகின்றது" என்றார் அவர். கடைசியாக இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களிலும் பிரச்சினைகள அணுகப்பட்டுள்ள முறையானது திருப்தியளிப் பதாகவிருக்கின்றது. சமஷ்டி அமைப்பு மனித உரிமைகள், குழந்தைப் போராளிகள் போன்ற விடயங்கள் அழுத்தமான முறையிலன்றி மென்மையான முறையில் அணுகப்பெற்றுள்ளன என்பது உண்மை தான். முஸ்லிம்கள் பற்றிய சூடான விடயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இறுக்கமான பிரச்சினைகளுக்கு இப்போது அழுத்தம் கொடுக்காமல் உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் செயல்படுவதென இரு தரப்பும் இணங்கிப்போயிருப்பது போல் தென்படுகின்றது.

பேர்ளின் மாநாட்டுக்கு பிறகு விடுக்கப்பட்ட அறிக்கையிலும் சர்வதேச உதவிகள் பற்றியே அதிகம் பேசப்பட்டுள்ளது.

மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு உடனடி தேவைகளுக்கு உதவி வழங்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கை அமைதி முயற்சியானது உலகுக்கு ஒரு நல்லுதாரணமாகும். எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப உதவிகள் வழங்கும்படி ஒரே குரலில் நாம் வேண்டுகிறோம் என்று கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த வகையில் ஜப்பானில் இடம் பெறப்போகும் பேச்சுக்கள் முக்கியமானவையாகவிருக்கும். (பி)

### சமாதான அன்னதானம்

(நெடுந்தீவு)

அரசு-புலிகளுக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு இன்று ஓராண்டு நிறை வடைவதை முன்னிட்டு நெடுந்தீவு மேற்கு கரவத்தை கந்தசாமியார் ஆலயத்தில் அன்னதான நிகழ்வு இடம் பெறவுள்ளது. (உ-126)





ஏ-9 வீதி துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
படங்கள் க.பவன்

# குறிப்பிட்ட திகதிக்குள் ஈராக் ஆயுதக் களைவு செய்ய வேண்டும்

## கனடா முன்வைக்கும் புதிய யோசனை

(ஒட்டாவா)

குறிப்பிட்ட ஒரு திகதிக்குள் ஈராக் ஆயுதக்களைவை நிறைவேற்ற வேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை கோரிக்கை விடுக்க வேண்டும். அல்லது அதன் விளைவுகளை எதிர்நோக்க வேண்டு மென்பதை ஈராக்கிற்கு விளக்க வேண்டுமென கனடா கோரியுள்ளது.

ஈராக் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு முயற்சியாக இந்த புதிய யோசனையை கனடா முன் வைத்துள்ளது.

ஈராக்கில் பணிபுரியும் ஐ.நா ஆயுத பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டுமெனக் கோரும் நாடுகளுக்கும்,

ஈராக் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறும் நாடுகளுக்குமிடையே அதிகரித்து வரும் இடைவெளியை இந்தப் புதிய யோசனை மூலம் குறைக்க முடியும் எனக் கனடா தெரிவித்துள்ளது.

ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் கனடா அங்கம் வகிக்காத போதிலும் யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடிய அனைத்து நடவடிக்கை களையும் எடுத்து வருவதாக கனடா வின் வெளிவிவகார அமைச்சர் பில்கிரகம் கூறியுள்ளார்.

கனடாவின் புதிய யோசனையின் படி மீதமாகவுள்ள ஆயுத சோதனை நடவடிக்கைகளை ஈராக் குறிப்பிட்ட ஒரு திகதிக்குள் நிறை வேற்ற வேண்டும்.

இந்த ஒத்துழைப்பு போதுமானதா என்பதை ஐக்கியநாடுகள் சபை பின்னர் தீர்மானிக்கும் என்றார் பில்கிரகம்.

### ஆபிரிநாடுகளின்ஆதரவைப் பெறஅமெரிக்கா பேச்சு நடத்துகிறது

ஈராக் மீதான யுத்தத்திற்கு அங்கீ காரம் வழங்கும் வகையிலான இரண்டாவது தீர்மானத்திற்கு ஆபி ரிக்காவின் அங்கோலா, கேமரூன், கினி ஆகியநாடுகளின்ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அமெரிக்காவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பேச்சு நடத்தி வருகிறார்.

ஈராக் மீதான யுத்தத்திற்கு அங்கீ காரம் வழங்கும் இரண்டாவது தீர்மானத்தை அமெரிக்கா அடுத்த சில நாட்களில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் சமர்ப்பிக்க வுள்ளது.

இந்த நிலையில் ஈராக்கில் பணி புரியும் ஐ.நா ஆயுத சோதனை யாளர்கள் அவர்களது கடமையை முழுமையாக நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு மேலும் அவகாசம் வழங்க வேண்டும் என பாதுகாப்புப் பேரவையில் 52 ஆபிரிக்க நாடுகள் வாக்களித்துள்ளன. அங்கோலா, கேமரூன், கினி ஆகிய நாடுகளும் இந்த 52நாடுகளில்அடங்குகின்றன.

எனினும் இந்த நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஆபிரிக்க அலுவல்களுக்கான அமெரிக் காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் வோல்டர் கிங்ஸ்டேனர் அந்த நாடு களின் தலைவர்களுடனான பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (பி-2)

### அரபு நாடுகளின் மாநாடு மார்ச் மாதம் 1ஆம் திகதி

(கெய்ரோ)

அரபு நாடுகளின் மாநாடு ஒன்றை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடத்துவதற்கு எகிப்தும், பாஹ்ரேனும் இணக்கம் கண்டுள்ளன.

எகிப்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஈராக் மீதான நெருக் கடி குறித்து விரிவாக ஆராயப் படுமென பாஹ்ரைன் செய்திகள் கூறுகின்றன.

பாஹ்ரைன் மன்னர் ஜமாபீன் ஈஷா அல்கிரியா தொலைபேசி மூலம் எகிப்திய ஜனாதிபதி குஷின் இபாரக்குடன் உரையாடிய பின்னர் இந்த மாநாட்டை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

கெய்ரோவில் இருக்கின்ற அரபு லீக்கின் தலைமையகத்தில் நடை பெறவுள்ள இந்த மாநாட்டிற்கான அழைப்பை பாஹ்ரைன் அரபு நாடுகளுக்கு விடுக்கவுள்ளது. (பி-2)

## விஷப்புகையிலிருந்து தப்புவதற்கு கோழிகள்!

(நியூயோர்க்)

ஈராக் மீது போர் தொடங்கினால் விஷப் புகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கோழிகளைப் பயன் படுத்த அமெரிக்க இராணுவத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

ஈராக் இராணுவத்தினர் விஷக் கிருமிகள் அடங்கிய வாயுவை வெளி யிட்டால், அதுபற்றி தெரிந்து கொள்ள போர் முனையில் கோழி களை ஒரு கூண்டில் அடைத்து முதலில் ஒரு வாகனத்தில் அவற்றை அனுப்புவர். அவை இறந்து போனால விஷப்புகையிலிருந்து காத்துக் கொள்ளும் முகமூடிகளை அணிந்து கொண்டு அமெரிக்க இராணுவத்தினர் சண்டை யில் ஈடுபடுவர்.

விஷப்புகையைக் கண்டறியும் சாத னங்கள் அமெரிக்க இராணுவத் திடம் உள்ளன. போர் நடைபெறும் போது அப்பகுதியில் உள்ள எண்ணெய்க் கிணறுகளில் குண்டுகள் வீசப்பட்டு அவை தீப்பற்றி கரும்புகையை வெளி யிடும்.

இதனால் விஷப்புகையைக் கண்டறியும் சாதனங்கள் சரிவர வேலை செய்யாமல் போகலாம். அத்தருணத்தில் கோழிகளைப் பயன்படுத்த அமெரிக்க இராணுவம் திட்டமிட்டுள்ளது. (பி)

## நுண்ணலை ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தும்

(வாஷிங்டன்)

ஈராக் மீது போர் ஏற்படும் பட் சத்தில் மின்னலைப் போல் பாயும் நுண்ணலை ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தக்கூடும். போரில் இந்த வகை ஆயுதங்கள் முக்கிய பங்கு வகிக்கும் வாய்ப்பு உள்ளது என்று வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளி யிட்டுள்ளது.

போதுமான அளவில் உயர் சக்தி நுண்ணலை ஆயுதங்கள் பயன் படுத்தப்படுமானால் போர் தொடங்கிய சில மணி நேரத்திலேயே ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் இராணுவம் முன்னேற முடியாத நிலைமை ஏற்படலாம்.

தகவல் தொடர்பு முற்றிலும் பாதிக் கப்பட்டு விடும் என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்கா வசம் இந்த நுண்ணலை ஆயுதங்கள் எவ்வளவு உள்ளது என்ற விபரம் தெரியவில்லை. அமெரிக்கா இந்த ரக ஆயுதத்தை யூகோஸ்லாவியாவின் தகவல் தொடர்பை இடையூறு செய்யும் பொருட்டு கொசாவோவில் 1990ஆம் ஆண்டில் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.ஆனால் இது உறுதி செய்யப்படவில்லை.

கலிபோர்னியாவில் இந்த நுண்ணலை ஆயுதங்கள் அமெரிக்க இராணுவத் தலைமையகத்துக்காகத் தயாரிக் கப்பட்டு வருகிறது. இது ஜெட் விமானங்கள் முதல் டி.வி வரை செயல் இழக்கச் செய்து விடும். செல்போன், கம்பியூட்டர் போன்ற வற்றையும் இதனால் செயல்படாது செய்ய முடியும். மனிதர்களுக்கு இதனால் ஆபத்து இல்லை என்று இவ்வகை ஆயுதத் தயாரிப்பு நிறுவன அதிகாரி தெரிவித்ததாகவும் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

இரசாயன, உயிரி ஆயுதங்களை யும் பூமிக்கடியில் உள்ள இராணுவ தளங்களையும் நுண்ணலை ஆயு தங்கள் அழிக்கக்கூடும் என்று ஆயுத நிபுணர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர். (பி)

## அமைதியை விரும்பினாலும் பிச்சை எடுக்க மாட்டோம்

## வடகொரியா அறிவிப்பு

(பெய்ஜிங்)

அமைதியையும், ஸ்திரத்தன்மை யையும் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அதற்காக எந்த நாட்டிடமும் பிச்சை எடுக்க மாட்டோம் என்று வடகொரியா அறிவித்துள்ளது.

அணு ஆயுத பலத்தை வடகொரியா அதிகரித்து வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. அணு ஆயுதத்தைக் குறைக்க வேண்டும் என்று வடகொரியாவை அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

வடகொரியாவின் அணு ஆயுதப் பிரச்சினைக்கு தீர்வு காண அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் ஜப்பான், சீனா, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு விரைவில் சுற்றுப் பயணம் மேற் கொள்வார் என்று வாஷிங்டனில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது.

இந்த செய்தி வெளியானதை அடுத்து சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள வடகொரிய தூதரகத்தில் இருந்து அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும்வகையில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வடகொரியாவில் அமைதியையும் ஸ்திரத்தன்மை செய்ய தாங்கள் விரும்புவதாகவும் இதற்காக எந்த நாட்டிடமும் பிச்சை எடுக்க மாட்டோம என்றும் அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

அணு ஆயுதப் பிரச்சினைக்கு சர்வதேச அளவில் அமைதியான தீர்வு ஒன்றை காண அமெரிக்கா தயக்கம் காட்டி வருகிறது. அது மட்டும் அல்லாமல் தென்கொரியா வில் அமெரிக்கா தனது அணு ஆயுத பலத்தை அதிகரித்து வருகிறது என்றும் அந்த அறிக்கையில் வட கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

### வன்முறைகளில் 32 பேர் பலி அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது

## பொலிவியாவில் சம்பவம்

(சுக்ரி)

பொலிவியாவில் கடந்த ஒரு வாரகாலமாக இடம் பெற்று வந்த வன்முறைகளால் 32 பேர் உயிரிழந் துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டின் அமைச் சரவையை பொலிவியா ஜனாதிபதி முற்றாக மாற்றியமைத்துள்ளார்.

இந்த வன்முறைகளுக்கு காரணமாக விருந்த வரி முறைகளையும் பொலி வியா ஜனாதிபதி நீக்கியுள்ளார்.

சுமார் 8மில்லியன் சனத் தொகையை கொண்ட இந்த நாட்டில் கடந்த தசாப்தத்தில் நடந்த மிக மோச மான வன்முறைகளாக இவை கருதப் படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் கீழ் உத்தேசிக் கப்பட்ட வரி முறையை கைவிடு மாறும், ஜனாதிபதி லோஷோ னாவை பதவிவிலகுமாறு கோரியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதன் போது ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைக்கும் பொருட்டு இராணுவத்தினர் நடத்திய தாக்கு தலினாலேயே 32பேர் கொல்லப் பட்டனர் என்று அங்கிருந்த வரும் செய்திகள் கூறுகின்றன.(பி-2)

## 100கிராம் எடையுள்ள மிகச் சிறிய விமானம்

(ஜெருசலேம்)

100கிராம் எடையுள்ள மிகச்சிறிய விமானம் ஒன்றை இஸ்ரேல் தயாரித்து உள்ளது. இந்த விமானமானது கமராக்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை போர்க்களத்திற்கு பறந்து சென்று துல்லியமாக படங் களையும், தகவல்களையும் அனுப்ப வல்லது.

இந்த விமானத்தை கையால் இயக்க முடியும். இது தரையிறங் குவதற்கு சக்கரம் தேவை யில்லை. தரையில் இருந்து இந்த விமானத்தை பார்க்க முடியாத. ரேடார் கருவி மூலம் கூட பார்க்க முடியாது. இதை இஸ்ரேல் நாட்டு போர் விமான உற்பத்தி கம்பெனி தயாரித்து உள்ளது. லேப்டாப் அல்லது கையடக்க கம்பி யூட்டர்களுக்கு கூட படங்களை அனுப்பும் என்று ஹைஅரேட்ஜ பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த வகையான விமானத்தை ஏற்கனவே அமெரிக்கா தயாரித்து உள்ளது. இதை ஈராக், போர் மூண்டால் பயன்படுத்தலாம் எனத் தெரிகிறது. (பி)

## பூமிக்கடியிலுள்ள பங்கர்களை தாக்கி அழிக்கும் அணு ஆயுதம்

(வாஷிங்டன்)

பூமிக்கு அடியிலுள்ள பங்கர்களைத் தாக்கி அழிக்கக் கூடிய திறன் கொண்ட நவீன ரக சிறிய அணு ஆயுதங்க ளைத் தயாரிப் பதற்கு அமெரிக் காவின் புஷ் நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் முக்கிய இரா ணுவ தலைமையலுவலகம் ஒன்றில இது தொடர்பான இரகசியப் பேச்சு வார்த்தை எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி நடை பெறவுள்ளதா கக் கூறப்படுகின்றது.

மத்திய கிழக்கு நாடுகள் ஆயுதங் களை ஒளித்து வைக்கவும் ஆயுத தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்காகவும் பூமிக்கு அடியில் பங்கர்களை நிர்மானித்து வரு கின்றனர்.


இதனைத்தற்போதைய ஆயுதங் களால் நிலத்துக்கடியில் ஊடு ருவிச் செனறு அவற்றை அழிக்க முடியாதுள்ளது.

இதன் காரணமாகவே புதிய வகை யான சிறிய அணு ஆயுதங் களைத் தயாரிக்கத் தீர்மானித் துள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் கூறியுள்ளார்.

பேரழிவை ஏற்படுத்தும் அதிப யங்கரமான இரசாயன ஆயுதங் களை ஐக்கியநாடுகள் சோதனைக் குழுவினர் உட்பட யாரும் கண்டு பிடிக்க முடியாதளவுக்கு இரகசிய மாக பூமிக்கடியில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹிசைன் மறைத்து வைத் திருப்பதாக ஈராக் நாட்டில் விஞ்ஞானி யாகவிருந்த உஷை அலஷை தான் என்பவர் தெரிவித்துள்ளார் இவர்தற்போதுஈராக்கில் வெளியேறி லண்டனில் வசிக்கிறார். (பி-2)

# 2002 சமாதானத்தை நோக்கி.... 2003...





நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலைத்திட எமது வங்கியின் ஆசிகள்




வாடிக்கையாளரின் உருவப்படம் கொண்ட விசேட தன்னியக்க பண மாற்று அட்டை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

தங்க நகை கடன்சேவை தற்பொழுது ரூ 1000/-த்திற்கு மாதம் ரூ 15.00 மட்டுமே வட்டி அறவிடப் படுகிறது

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

சிரேஸ்ட முகாமையாளர்,
பணியாளர்களும்

இலங்கை வங்கி
மேந்தரக் கிளை
யாழ்ப்பாணம்.

நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் நிலைத்திட மக்கள் குரல் சக்தியுடன் உரத்து ஒலித்திட ஜனசக்தியின் வாழ்த்துக்கள்



JANASHAKTHI
INSURANCE

உங்களது ஆயுள் மற்றும் வாகன பூரணகாப்புறுதி, தீ காப்புறுதி, அனைத்து ஆபத்துக்களுக்குமான கட்டட ஒப்பந்த காப்புறுதிகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய முன்னணி காப்புறுதி நிறுவனம்

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனமாகும்

இல: 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நிலையான நீதியான சமாதானம் நிலைக்க வேண்டும் என்று இறை ஆசீர் வேண்டி நிற்கின்றோம்.

# Patrician Institute of Higher Studies
# And Industrial Institute

59, St. Patrick's Road, Jaffna.

## சமாதானம் குறித்த கருத்தொற்றுமை ஏற்படாதவரை

# இறுதித் தீர்வுக்குத் தென்பகுதியில் இருந்து முட்டுக்கட்டை ஏற்படுவதை தவிர்க்க இயலாது

## பெரும்பான்மையின பேராசிரியர் கள் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால், தென்பகுதியில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்குமிடையே இது தொடர்பான கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும்.

தென்பகுதியில் இக் கருத்தொற்றுமை இல்லாது போனால் இறுதித் தீர்வுக்கான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டே தீரும்.

பேராசிரியர் அமரசிறி சொய்ஸா, கலாநிதி விக்கரமபாகு கருணாரட்ணா ஆகியோர் இலங்கை வானொலியின் சிங்களப் பிரிவு நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஒரு மித்த குரலில் மேற்சொன்ன கருத்தை எச்சரிக்கைத் தொனியில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பேராசிரியர் அமரசிறி சொய்ஸாவும், கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணாவும் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வடக்கின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தனித்து நின்று ஒரு போதும் தீர்வுகாணமுடியாது.

விடுதலைப்புலிகளுக்கும் வடக்கில் உள்ள ஏனைய அரசியல் குழுக்களுக்குமிடையே இணக்கப்பாடு ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

அரசின் தற்போதய சமான முயற்சிகளுக்கு எதிர்ப்புத்தெரிவிப்பவர்கள் மாற்றுத் தீர்வுத் திட்டங் களை முன்வைக்க வேண்டும்என்றும்இருவரும் வலியுறுத்திக் கூறினார்கள்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் நாட்டில் அமைதிச் சூழல் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இந்த உடன்படிக்கையில் குறைபாடுகள் இருந்தாலும், நிரந்தர அமைதி நிலைநாட்டப்படும் வரை சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தவறுகளைச சுட்டிக்காட்டி சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பது உகந்த செயற்பாடு அல்ல. அவறறைத் திருத்திக் கொண்டு சமாதான முயற்சிகளில் முன்னேற வேண்டும் ஏனவும் அவர்கள் கூறியுள்ளார்கள. (ம)

## மீளக்குடியமர்ந்தோர் கவனத்திற்கு

(கல்வியங்காடு)

ஜே/109 நல்லூர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து 200 0ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்கள் தங்களது அடையாள அட்டை பங்கீட்டு அட்டை, வங்கிக கணக்குப் புத்தகம் ஆகியவ்றறுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வந்து சந்திக்குமாறு அப்பகுதி கிராம உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (உ-54)

## இறுதிப் பரீட்சை

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்மாகவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பதிவுகளை புதிப்பித்துக் கொள்வதற்காக எதிர் வரும் 28 ஆம் திகதிக்கு முன்ம் நிலையத்திற்கு சமூகம் கொடுக்குமாறு யாழ் நிலைய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ-54)

# 2 இலட்சத்து 59 ஆயிரம் பேர்

# 2002இல் மீளக் குடியேற்றம்

(கொழும்பு)

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 2 லட்சத்து 59 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸதானிகராலயம் நடத்திய கணக்கெடுப்பின் அடிப்படையில் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இது விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் வழங்கிய புள்ளிவிபரங்களின் அடிப படையில் இருந்தே இத்தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணமாவட்டங்களான அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் விபரங்கள் தற்போது திரட்டப் பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்திருப்பதாக புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சு விடுத் துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுளளது. (உ-3)

## எந்தச் சமூகத்தையும் ஏமாற்றுவதாக இறுதித் தீர்வு அமையக்கூடாது

## அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசிற்கும் - தமிழீழ விடுதலைப்



புலிகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் எட்டப்படும் தீர்வு எந்தவொரு சமூகத்தையும் ஏமாற்றுவதாக அமைந்துவிடக் கூடாது.

இவ்வாறு மன்னார் மாவட்ட பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக்கழகங்களுக்கான உபகரணங்களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு பேசிய அமைச்சர் ,முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையையே கேட்கிறது.

இதனை எந்த ஒரு இனத்திற்கும் எதிரான கோரிக்கையாக கருதக் கூடாது.

அதேவேளை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் சமாதான முயற்சிக்கு ஒருபோதும் தடைக் கல்லாக அமையாது என்றார். (உ-10)

## நோர்வே அரசு பிரதிநிதிகள் கலந்துரையாடல் நிறைவு

(கொழும்பு)

நோர்வே அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும -அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும்இடையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த அரசியற் கலந்துரையாடல்கள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன.

அரசாங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுக்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவும், திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்தையும் தலைமைதாங்கினர்.

நோர்வே பிரதிநிதிகள் குழுவுக்கு நோர்வேயின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரதி அமைச்சர் ஒலாப் பெர்வாறும் தலைமைதாங்கினார்.

இக்கலந்துரையாடல்களில் பொருளாதார, வர்த்தக, கைத்தொழில் அபிவிருத்திகள் சம்பந்தமாகவும், யுத்தத்தினால் பாதிக்கப பட்ட பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மனிதாபிமானத் தேவைகள் புனர் வாழ்வு. புனரமைப்பு மற்றும் அபி விருத்தி நடவடிக்கைகள் தொடர் பாகவும் ஆராயப்பட்டது.

# ஒடுக்கு முறைகளுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை ஆதரிப்போம்

## தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதி

(கிளிநொச்சி)

ஒடுக்குமுறைகளுக்கான மக்களின் போராட்டத்தை தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஆதரித்து வருகிறது. இத்தகைய ஒடுக்குமுறைப போராட்டம் தென்னாபிரிக்கா வில் அதிகம் நடைபெற்றுவருகிறது.

ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு எழும் பிரச்சினைகளை அமைதியான வழியில் தீக்கப்பட வேண்டுமே ஒழிய இராணுவ ரீதியாக அல்ல என்று தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதி இப்ராகிம் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விடுதலைப்புலிகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடனான சந்திப்பை அடுத்து இப்ராகிம் இஸ்மாயில் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தென்னாபிரிக்கா எவ்வகைகளில் உதவலாம் என்பது பற்றியும், தமது சமாதானத் தீர்வுப் பேச்சுகளின் அனுபவம் பற்றியும் அவர் மேலும் எடுத்துக் கூறினார். (வ)

## தமிழ் தேசிய பெரு விளையாட்டு விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறையில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படும் 2வது தேசிய விளையாட்டு விழாவின் மூன்றாம் நாளான இன்று காலை

✳கேணல் சங்கர் ஞாபகார்த்த மென்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி அணி எதிர் திருமலை அணியும், வவுனியா அணி எதிர் முல்லைத்தீவு அணியும் மோதவுள்ளன.

✳ மேஜர் சோதியா ஞாபகார்த்த வலைப்பந்தாட்டப் போட்டியில் காலை யாழ்ப்பாண அணி எதிர் அம்பாறை அணியும், இரவு திருமலை அணி எதிர் மன்னார் அணியும் மோதவுள்ளன.

✳ லெப்கேணல் விக்ரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு அணிஎதிர்யாழ்ப்பாண அணியும், வவுனியா அணி எதிர் அம்பாறை அணியும் மோதவுள்ளன. (உ-3)


வேம்படி மகளிர் கல்லூரி

இல்ல விளையாட்டுப் போட்டி - 2003

காலம் : இன்று (22.02.2003) சனிக்கிழமை பி.ப.2.00 மணி

இடம் : கல்லூரி மைதானம்

பிரதம விருந்தினர்

திரு. செ. பத்மநாதன்

(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

பெற்றோர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(C/5789)



இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003

இடம் : மன்றக் கலாமண்டபம்

காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

நிகழ்ச்சி நிரல

இன்று (22.02.2003) சனிக்கிழமை 9ஆம் நாள்

மாலை 4.00 மணி முதல் 5.00மணி வரை

மங்கள இசை

நாதஸ்வரம் / தவில்

ஆர். சிவகுமார் / என். ஜெயராமன்

ஜெ. சிவதாஸ் / பீ. கணேசன்

மங்கள விளக்கேற்றல்

திரு. சோ. பத்மநாதன்

தலைவர் இளங்கலைஞர் மன்றம்

மாலை 5.00 மணி முதல் 5.45 மணி வரை

வீணைஇசை

வீணை: தயானி அறிவழகன் மிருதங்கம் : எஸ். துரைராசா

மாலை 5.45 மணி முதல்

இசைப்போட்டி - 2003 பரிசளிப்பு வைபவம்

பிரதம விருந்தினர்

பேராசிரியர், பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

இரவு 6.15 மணி முதல் 7.15 மணி வரை

இசைக்கச்சேரி

பாட்டு : வி.கே. நடராசா வயலின் : எம். ரதீஸ்குமார்

மிருதங்கம் : கே. கண்ணதாசன் கெஞ்சிரா : கே. நந்தகுமார்

முகர்சிங் : என். சதீஸ்

இரவு 7.15 மணி முதல் 8.15 மணி வரை

திருமதி ஆனந்தி ஜோதி தர்சனனின்

மாணவர்கள் வழங்கும்

"நர்த்தனாஞ்சலி"

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சட்டநாதர் வீதி நல்லூர். (C/5761) மன்றத்தினர்

# வாழ்க்கையில் வெற்றிபெற ஆளுமை விருத்தி வளர்க்கப்பட வேண்டும்

## கல்வியியல் துறை விரிவுரையாளர் கருணாநிதி

(பருத்தித்துறை)

''மாணவர்களின ஆளுமை விருத்தி மேம்படும் போதுதான் அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.மாணவர்கள் விளையாட்டுத் துறைகளிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தாமையே அவர்களது ஆளுமை விருத்தி தடைப்படுவதற்கு காரணமாகின்றது.''

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு பல்கலைக் கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கருணாநிதி குறிப்பிட்டார்.

அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் கலாநிதி கருணாநிதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது விளையாட்டுத்துறை, இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும்.ஆசிரியர், பெற்றோர்கள்,மாணவர்களுக்கு வழிகாட்டிகளாகத்திகழ வேண்டும்.

மனிதன் வலுமிக்க திடகாத்திரமான மனிதனாக வாழ வேண்டும். திடகாத்திரமான உடலையுடைய மனிதனிடம் தான் திடமான நற்சிந்தனைகள் உருவாகமுடியும்.

விளையாட்டுத்துறை மனித உடல், உள வளர்ச்சிகளை மேம்படுத்த மனித இலட்சியத்தில்வெற்றி பெற வழிவகுக்கும்.

இன்றைய மாணவர்கள் ஆங்கிலக் கல்வியுடன் கணனி அறிவையும் பெற்றுக் கொள்ள வேண்டும். விஞ்ஞான,தொழில் நுட்பமாற்றங்களுக்கேற்பமாணவர்கள் அறிவு ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள ஆங்கிலக கல்வியும்,கணனி அறிவும் மிக முக்கியம் வாய்ந்தது.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள்பெற்றோர்கள் இணைந்து செயற்பட வேண்டும்மாணவர்களுக்கு வேண்டிய வழிவகைகள் சிறப்பாகக் காட்டப்படும் போது எதிர்காலத்தில் நாட்டிற்குகந்த நற்பிரஜைகள் உருவாக முடியும். அவர்கள் தான் நாட்டைச் சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்வர்.

இவ் வித்தியாலயம் கல்வியுடன் விளையாட்டுத்துறை இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்வது பாராட்டப்பட வேண்டும் என்றார். (உ-52)







யாழ். குடாநாட்டில் மீளக்குடிமர்ந்தவர்களுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்றபோது அதில் கலந்து கொண்ட பிரதமரின் ஆலோசகர் ஞானானந்த சுவாமி உரையாற்றுவதையும், சிவாஜிலிங்கம் எம்.பி கொடுப்பனவு வழங்கலை ஆரம்பித்து வைப்பதையும்,கொடுப்பனவைப் பெற வந்திருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள் -பவன்

# மிதிவெடி விழிப்புணர்வு பரப்புரை நாடகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டு மக்களிடையே மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்தின் செயல் திறன் அரங்க இயக்கம், யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 'முடக்கம்' என்னும் பரப்புரை ஆற்றுகை நிகழ்வை சன சமூக நிலையங்கள், பாடசாலைகள்போன்ற சமூகமையங்களில் மாலை வேளைகளில் அளிக்கை செய்து வருகின்றது.

ஏற்கனவேமிதிவெடிவிழிப்புணர்வை மையமாகக் கொண்டு மேற்குறித்த இரு அமைப்புகளும் இணைந்து 130 தடவைகள் நிகழ்த்திய 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற நாடகத்தின் தொடர்ச்சியான ஒரு அரங்க நடவடிக் கையாகவே தற்போது நடத்தப்பட்டு வரும் 'முடக்கம்' என்ற நாடகம் அமைந்துள்ளது.

இந் நாடகத்தை கலாநிதி முருகையனின் கவிதையோடும் த.றொபேட்டின் இசையோடும் ஒரு உணர்வோட்டமான உண்மைக்கதையை கலந்து நெறியாள்கை செய்துள்ளார் தே.தேவானந்த்.

பொதுமக்கள் மத்தியில் தெளிவான முறையில் மிதி வெடி தொடப்பான கருத்துக்களை எடுத்துரைத்து மிதி வெடி விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் 'முடக்கம்' நாடகம் இதுவரை 20 சமூகமையங்களில் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மிதிவெடி, வெடிபொருட்கள் பாதிப்பு அபாயம் உள்ள தென்மராட்சிப் பகுதியில் இச்செயற்பாடு நடைபெறுகிறது. இவ்வாற்றுகை மகககளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுகுறிப்பிடத்தக்கது.

# தொழில்நுட்ப விளக்க உரை

(யாழ்ப்பாணம்)

ஏ.எம்.ரி. போக்குவரத்துச் சேவையினால் டாட்டா கனரக வாகனம், உழவு இயந்திரங்கள் அவற்றிற்கான உதிரிப் பாகங்களுக்கான தொழில் நுட்ப விளக்க உரையும் கண்காட்சி நிகழ்ச்சியும் கலந்துரையாடலும் இன்று மு.ப. 10.00 மணிக்கு 431 ,கோவில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். ப.நோ.கூ. சங்கத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் அரச திணைககளஙகள், கூட்டுறவுத் திணைக்களங்கள், விவசாயப்பெருமக்கள், கனரக உரிமையாளர்கள், கொள்வனவாளர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

# அவைக்காற்று நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிற்கான இரண்டாம் சுற்று அவைக் காற்று நிகழ்வு இன்றும்,நாளையும் இடம் பெறவுள்ளது.

பரதம்-யாழ் இந்துமகளிர் கல்லூரியிலும் சங்கீதம்- யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் காலை 9 மணி தொடக்கம்நடை பெறவுள்ளது. (உ)

# கைத்தொழில் பேட்டை அமைக்க பிரான்ஸ் விருப்பம்

(கொழும்பு)

பிரான்ஸ் வர்த்தகப் பிரமுகர்கள் இலங்கையில் தங்களுக்கென தனியான கைத்தொழில் பேட்டை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் ரவி கருணாநாயக்காவை அண்மையில் சந்தித்த போதே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சமாதான முயற்சிகள் வெற்றி கரமாக நகர்வதை அடுத்து வெளி நாடுகள் பலவும் இங்குமுதலிடஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தககது. (உ.கி)

# தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் புதனன்று திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்,பெண்கள் தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா கடந்த புதன் கிழமை சமுதாய முன்னேற்ற நிலையத்தின் இயக்குநா வே. பூங்குன்றன் தலைமையில்,நடை பெற்றது.

இந்நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட முறைசாராக் கல்விப் பணிப்பாளர் சின்னத்துரை ,தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

தேசியக் கொடியினை கடடளைப் பணியக தளபதி ஜொனி ஏற்றி வைத்தார்.கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் பெயர்பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

தகவல் தொழில் நுட்பக்கல்லூரி மண்டபத்தை தமிழீழ அரசியல் துறைபபொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நாடவை வெட்டி திறந்து வைத்தார்.

பெண்கள் தொழில்நுட்ப பயிற்சி மண்டபத்தினை கிளிநொச்சி மாவட்ட மாவரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி நாடவை வெட்டி திறந்து வைத்தார்.

இதில் அரசஅரசசார்பற்ற நிறவனப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள்,பயிற்சி ஆசிரியர்கள்,மாணவர்கள்ஆகியோர் கலந்து கொணடனர்.

இபபயிற்சி நிலையம் தமிழர் புனாவாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் ஆரமபிக்கப் பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (உ)

# கரித்தாஸ் திட்டங்களில் தீவகத்திற்கு முன்னுரிமை

(ஈச்சமோட்டை)

பிரான்ஸ் அரசினால், பிரான்ஸ் கரித்தாஸ் நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ள 20 மில்லியன் ரூபா நிதியில் இருந்து தீவுப்பகுதியில் பல புனர்வாழ்வுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரித்தாஸ் நிறுவனத்தினர் யாழ். கியூடெக் நிறுவனத்தினரூடாக இப் பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இப் புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக வேலணை, அல்லைப்பிட்டி, சாட்டி, மண்டைதீவு ஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் தலா 55 ஆயிரம் ரூபா பெறுமதியான 266 வீடுகள் அமைக்கப்படுவதோடு மலசல கூட புனரமைப்புக்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

மேலும் விவசாயிகள், மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கான உள்ளீடுகளும் வழங்கப்படுகின்றன.

வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ளவர்களும்,விதவைகளும் இத்திடடங்களால் பெரிதும் நன்மைய டைந்து வருகின்றனர். (உ-59)

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கு மேலும் 5லட்சம் அமெ.டொலர்

## வழங்க உலக வங்கி முன் வந்தது

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப் பட்டுவரும் நிலக் கண்ணி வெடிகள் அகற்றும் பணிக்கு 2ஆம் கட்ட நிதியுதவியாக உலக வங்கி 5 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை ஒன்றில இலங்கை அரசும்-உலக வங்கியும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்திட்டத்துடன் கைச்சாததிட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இத் திட்டத்தின் உப நடவடிக்கை மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும்,

நிலக்கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு இந்நிதி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ-10)

# சமாதான பூஜை

(யாழ்ப்பாணம்)

தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று அமைச்சர் தி.மகேஸ்வரன் அனுசரணையுடன் விசேட சமாதான பூஜை வழிபாடுகள், சமாதானக்கூட்டு வழிபாடு, சமாதானப்பேருரை என்பன இடம் பெறவுள்ளன. (உ)

# மக்கள் பாவனைக்கு ஓட்டோ

(தனங்கிளப்பு)

கைதடி,நாவற்குழி மக்களின் பயன் பாடடிற்கென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் முச்சக்கர வண்டி ஒன்றினையும் 15 தையல் இயந்திரங்களையும் அண்மையில் வழங்கியுள்ளார். (உ-37)

# இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழாவின் 9ஆம் நாளான இன்று மாலை ஆர்.சிவகுமார், ஜெ. சிவதாஸ் ,என்.ஜெயராமன் பீ.கணேசன் ஆகியோரின் மங்கள இசையும், தயானி அறிவழகன்,எஸ. துரைராசா ஆகியோரின் வீணை இசையும இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து வி.கே. நடராசாவின் பாட்டுக்கச்சேரியும், திருமதி ஆனந்தி ஜோதி தர்சனனின் மாணவர்கள் வழஙகும் ''நர்த்தனாஞ்சலி'' நிகழ்வு இடம் பெறும்.

இந நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளைகலந்து கொள்ள வுள்ளார். (உ)

## இன்று ஒரு தகவல்

### குழந்தையும் காதும்

''சார்!உங்கள் பையன் எப்படி இருக்கிறான் என்று விசாரித்தார் ஒருவர். அவன் என்ன சார்... எதைச் சொன்னாலும் காதிலே வாங்க மாட்டேன் என்கிறான் தன் பாட்டில் போகிறான். வருகிறான்.'' என்று சொல்லி அலுத்துக் கொண்டார் அப்பா. பெரியவர்கள் சொல்வதைச் சிறுவர்கள் கேட்பதில்லை என்பது ஒருகுறை. பெரியவர்கள் சொல்வது சின்னப் பிள்ளைகளின் காதிலேயே விழுவதில்லை என்பது ஒருகுறை. இது கொஞ்சம் ஆபத்தான விஷயம். கவனித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு குழந்தைக்கு காது சரியாகக் கேட்கிறதா, இல்லையா என்பதை நாம் தான் கவனித்துப் பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டும். அதுவாக நம்மிடம் தவழ்ந்து வந்து அப்பா எனக்குக் காது கேட்கவில்லை. டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்காது. அது சரி! ஒரு குழந்தைக்கு காது சரிவரக் கேட்கிறதா? இல்லையா என்பதை முன்கூட்டியே நாம் தெரிந்து கொள்வது எப்படி.

அதற்குச் சில வழிகள் உண்டு. உங்கள் குழந்தையைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். அடிக்கடி ஜலதோஷம், காதில் அரிப்பு ஏற்படுகிறதா? மூக்கு விரிவாகவும், டான்சில் அடினாய்டு சதை அழற்சியும் இருக்கின்றனவா? வாயிலிருந்து எச்சில் ஒழுகுகிறதா? குழந்தை வாயினால் சுவாசிக்கிறதா? பற்கள் முன் தள்ளி வளருகிறதா? இவைகள் எல்லாம் அதற்கு அறிகுறிகள். அதன்பின் இந்த V-B-D-F-T-H ஒலிகள் சேர்ந்த வார்த்தைகளைக் குழந்தை சரியாகப் புரிந்து கொள்ளாது. உதாரணத்திற்கு But என்ற சொல்லு குழந்தை என்றால் அது Cut என்று சொல்லும். அதாவது But ஒலியை அதனால் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் உங்கள் குழந்தை உங்களை உரக்கப் பேசச் சொல்கிறதா? அடிக்கடி கேள்வி கேட்கிறதா? சாப்பிடுகிற பொழுது கவனமில்லாமல் இருக்கிறதா? படிப்பிலே போதிய முன்னேற்றமில்லையா? வகுப்பில் சரியாகக் கவனிப்பதில்லையா? இப்படியாக இருந்தால் ஆரம்பத்திலேயே டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போய் சிகிச்சையை ஆரம்பித்து விடலாம். குணப்படுத்தி விடலாம்.

குழந்தைக்குக் காது சரியாகக் கேட்கவில்லையென்றால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அதற்குக் காது கேட்கவில்லை என்பதற்காக அதன் முன் சத்தம் போட்டுப் பேசக் கூடாது. சீராகப் பேசுங்கள். அக்குழந்தையைப் பார்த்துப் பேசுங்கள். உங்கள் உதட் டின் அசைவுகள் அதற்கு உதவும். நீங்கள் வாயில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டோ, புகை பிடித்துக் கொண்டோ பேசாதீர்கள். அப்படிப் பேசினால் உங்கள் உச்சரிப்பைஅதனால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. ஒரு வார்த்தையைச் சொல்கிறீர்கள். அதற்குப் புரியவில்லை. அப்படியென்றால் அதே வார்த்தையை மறுபடியும் சொல்லுங்கள். அதற்கு நீங்கள் முதலில் சொன்ன வார்த்தை புரியவில்லை என்று நினைத்துக் கொண்டு... மறுபடியும் திருப்பிச் சொல்லுகின்ற பொழுது அதே அர்த்தம் வரக் கூடிய வேறு வார்த்தையைச் சொல்லக் கூடாது. இப்படி நடந்து கொண்டால் குழந்தைக்கு மனத்திடத்தை ஏற்படுத்த முடியும். இல்லையென்றால் அதற்குத் தாழ்வு மனப்பான்மை வந்துவிடும்.

குழந்தைக்கு காது கோளாறு என்றால் ஆரம்பத்திலேயே டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனால் போதும். குணமாக்கி விடலாம். பின்னர் பார்த்துக்கொள்ளலாம்என்று அலட்சியமாக இருந்து விட்டால் தான்கஷ்டம் சிலர் கோபத்தில் சிறு பிள்ளைகளின் காதைப்பிடித்து திருகுவார்கள். அது மிகவும் தப்பு. காது கையோடு வந்து விட்டால்என்ன பண்ணுவீர்கள்? ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். கதைதான். ஒரு வீட்டில் அப்பா, அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இதோ பார்... நாளைக்குக் காலையில் என்னைச் சீக்கிரம் எழுப்பிவிடு! நான் செங்கல் பட்டு வரையும் போய் விட்டு வர வேண்டியிருக்கிறது என்றார்.

இதை அவரின் பையன் காதில் வாங்கிக் கொண்டிருந்தான். அப்பாவுக்குச் சிரமம் வேண்டாம் என்று நினைத்து அவனே காலையில் யாருக்கும் தெரியாமல் எழுந்து புறப்பட்டு செங்கல் பட்டுக்குப் போய் விட்டான். சாயந்தரம் திரும்பி வந்தான். அப்பா பையனைக் காணாமல் அலை மோதிக் கொண்டிருந்தார். மாலையில் பையனைக் கண்டதும் எங்கேயடா போய் விட்டு வந்தாய் என்று கோபமாகக் கேட்டார். செங்கல் பட்டுக்குப் போய் விட்டு வந்தேன். அப்பா- நீங்கள் வீணாக அலைய வேண்டாம் என்பதற்காக என்றான் பையன். எதற்கடா போனாய் என்று அதட்டினார். அது தானப்பா நீ நேற்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாய்- அதைக்காதில் வாங்கினேன் உனக்காக நான் போய் விட்டு வந்தேன் என்றான்.

உடனே எந்தக் காதிலே வாங்கினாய் என்று சொல்லி பையனன் காதைப் பிடித்துத் திருகினார். அந்தக் காது கையோடு வந்துவிட்டது. இது நடந்து கொஞ்ச நாட்கள் கழித்து அந்த அப்பாவும் பையனும் கடைத் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். எதிரில் ஒரு நாய் ஓடி வந்தது. அதற்கு இரண்டு காதுகளும் இல்லை. என்ன ..இது இதற்கு இரண்டு காதுகளும் இல்லை என்றார் அப்பா. அது இரண்டு தடவை செங்கல் பட்டுக்குப் போய் விட்டு வந்திருக்கும் என்றான் பையன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வெளிநாட்டு ஆடம்பரக் கப்பல்கள் இலங்கை நோக்கிப் படையெடுப்பு

(கொழும்பு)

குயின் எலிசபெத்-ii உட்பட எட்டு வெளிநாட்டு பயணிகள் கப்பல்கள் அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் கொழும்புத்துறை முகத்திற்கு வரவிருக்கின்றன.

நாட்டில் கடந்த ஓராண்டு காலமாக நிலவி வருகின்ற சமாதானத்தில் வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்கள் பெரு நம்பிக்கை கொண்டிருப்பதை இந்த வெளிநாட்டுக் கப்பல்களின் வருகை எடுத்துக்காட்டுவதாக கப்பல்துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகளின் பயனாக இலங்கையின் துறைமுகங்கள் மீண்டும் பிரபலமடைய ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆயிரத்து 700 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு அடுத்த மாதம் 18ஆம் திகதி குயின் எலிசபெத் இலங்கை வரவுள்ளது.

போர்ச்சூழல் காரணமாக கடந்த இரு தசாப்தகாலமாக மேற்படி கப்பல் இங்கு வருவதை தவிர்த்து வந்தது.

இம்மாதம் 26ஆம் திகதி ''கொலம்பஸ்'' என்ற கப்பலும், 28ஆம் திகதி ''மினேர்வா'' என்ற கப்பலும் ஜப்பானின் ''அசுக்கா'' நாளையும் கொழும்புத் துறைமுகத்திற்கு வரவுள்ளன.

இவை தவிர கிறவுன்ஒடிஸ்ஸி, சீவிங், சீபோன்ஸ்பிறிற், டுஷ்லான்ட் ஆகியன ஓரிரு வாரங்களுக்குள் வரவிருக்கின்றன என்று கப்பற் போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவரும் இக்கப்பல்களால் பெருமளவு அன்னியச்செலாவணி கிடைக்கவுள்ளதாக சுற்றுலாத்துறையினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இக்கப்பல்களினதும் பயணிகளதும் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. (உ)

# போரா? சமாதானமா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவைச் செயலாளர்

(கொழும்பு)

1994இல் மக்கள் சமாதானத்திற்கான ஆணையை கொடுத்தனர். அதே மக்களாணை மீண்டும் 2001 டிசம்பரில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

அடுத்துவரும் தேர்தலில் அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அப்போது தாம் சமாதானத்தை தொடரவேண்டுமா? இல்லை மீண்டும் போரை நோக்கிச் செல்ல வேண்டுமா என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் பொதுச் செயலாளர் ரஞ்சன் டீ சில்வா செய்தியாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்போது மக்கள் சமாதானத்திற்கு ஆணை கொடுத்துள்ளனர். அதனால் சமாதானத்திற்கு ஆதரவாக செயற்படுவது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதற்கு முரணானவற்றை செய்வது தவிர்ப்பதும் அவர்கள் கடமையாகும்.

நடைபெற்ற போர் எமக்கு எந்தப் பயனையும் தந்திருக்கவில்லை. இன்றைய கால யுத்தங்கள் நீண்ட காலங்களுக்கு நீடிக்கப் போவதுமில்லை. போர் தொடர்ந்திருக்குமாயின் நாம் இன்று ஒரு நாடாக இருந்திருக்க மாட்டோம்.

பல போர் நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் இலக்கு அடைய முடியாததல்ல. போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு ஆண்டு முடிவுற்றதைக் குறிக்கு முகமாக தேசிய சமாதானப் பேரவை பெப்ருவரி 21 தொடக்கம் பெப்.23 வரை பல நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வருகிறது.

கொழும்பு கலாபவனத்தில் புகைப் படக்கண்காட்சி, அனைத்து மதங்களையும் தழுவிய நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்ச்சிகள், மாகாண மட்ட நிகழ்ச்சிகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல் போன்றவை நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார். (உ)

## இராசி பலன்

**22. 02. 2003**

(மாசி 10, சனி)

| | |
|---|---|
| சஷ்டி | மாலை 5.44வரை |
| சுவாதி | பி.ப 3.06வரை |
| இராகுகாலம் | 9.31-11.01 |
| சுபநேரம் | 3.31 - 5.01 |

அமிர்த சித்தம்

**மேடம்**
காரிய அனுகூலம்,நண்பர்கள் சந்திப்பு, செய்தொழில் முன்னேற்றம், தனவரவு.

**இடபம்**
தேகநலன், புதிய திட்டமிடல், கருமங்கள் கைகூடும், பகைவர் நேசம்.

**மிதுனம்**
கௌவரக்குறைவு, வியாபார நன்மை, முயற்சி தாமதம், வாக்கு பலிதம்.

**கடகம்**
பெரியோர்மனஸ்தாபம்,வேலைக்கஷ்டம், காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**சிங்கம்**
தடைப்பட்ட கருமங்கள் நிறைவேறும், உறவினர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, தொழில்விருத்தி.

**கன்னி**
உத்தியோகநன்மை, தனவிரயம், சகோதரர் உதவி, முயற்சி தாமதம்.

**துலாம்**
போசனசுகம், காரிய சித்தி, செல்வாக்கு, நல்லமுயற்சி.

**விருச்சிகம்**
கற்பனை மிகுதி,பிரயாணம், தொழில் கஷ்டம், கௌரவக்குறைவு.

**தனுசு**
குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, புதிய சிந்தை, தனலாபம்.

**மகரம்**
செய்தொழில் முன்னேற்றம், பிறர் உதவி, தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம்.

**கும்பம்**
புதிய திருப்பம், பிரயாணம்,கட்டுப்பாடு, காரிய தாமதம்.

**மீனம்**
பிணக்கு, காரிய தடங்கல், அமைதிக் குறைவு, வாகன பயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# குடாநாட்டுப் பாடசாலைகளில் நேற்று சமாதான தீபமேற்றல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சமாதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ, இதற்கான பணிப்புரையினை நாடு தழுவிய ரீதியில் சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்திருந்தார்.

நேற்றுக் காலை 8மணி முதல் 9மணி வரை இந்தச் சமாதான நிகழ்வுகள் பாடசாலைகளில் இடம் பெற்றன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள் மற்றும் பெற்றோர் இந்நிகழ்வுகளில் உண்மைச் சமாதானம் மலரும் என்ற உறுதிப்பாட்டுடன் பங்கேற்றமை அவதானிக்க முடிந்தது.

சமாதான தீபம் ஏற்றல், சமாதான செயற்றிட்ட விளக்கவுரை, சமாதானப் பிரகடனம் வாசித்தல் ஆகியன இந் நிகழ்வுகளில் முக்கிய இடம் பெற்றிருந்தன. (உ-4)

# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் இலங்கை வருவார்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மெடோவோட்சீன் அடுத்த மாதம் 2ஆம் திகதி அன்று இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையினை அதிகரிப்பது குறித்து ஆராய்வதற்காகவே பெடோவோட் இலங்கை விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட நிதி உதவிகள் இதன் மூலம் அமுல்படுத்தபடும் செயற்றிட்டங்கள், அபிவிருத்தித்திட்டங்கள் என்பவற்றையும் இவர் பார்வையிடவுள்ளார் என அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (உ-8)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் க. இராஜதுரை தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவரான ஜனாப். எம்.எம். சபுருடின் கலந்து கொள்ளவுள்ளார். (உ-3)

# மனித உரிமை ஆணைக்குழு ஆனந்தராஜாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாக்கிளையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைக்கு பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாக்கிளை அலுவலகம் இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளது.

விசேட குற்றத்தடுப்புப் பிரிவின் வவுனியா நிலையப் பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி. தர்மதாஸ கடந்த வருடம் மேற்படி ஆணைக்குழுவில் செய்திருந்த முறைப்பாட்டை அடுத்தே இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக முறைகேடு மற்றும் அரசியல் பழிவாங்கல் காரணமாக தனக்குக் கிடைக்க இருந்த பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு கிடைக்கவில்லை என மனித உரிமை ஆணைக் குழுவின் வவுனியாக் கிளையில் எஸ்.பி தர்மதாஸ முறைப்பாடு செய்திருந்தார். (உ-8)

# ஏ-15 நெடுஞ்சாலை நேற்று முன்தினம் திறப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் இருந்து வாகரை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை இணைக்கும் ஏ.15 நெடுஞ்சாலை நேற்று முன்தினம முதல் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வீதி காலை 6மணி முதல் மாலை 7 மணி வரை பொதுமக்களின் பாவனைக்காக தினமும் திறந்து விடப்படும்.

கடந்த 20 வருடங்களாக இவ்வீதி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் போர்ச்சூழல் காரணமாக மூடப்பட்ட வீதிகள் பல திறந்து விடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது —குறள்

வலம்புரி

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இன்றோடு ஒரு வருடம் பூர்த்தியடைகின்றது. ஒருவருட நிறைவைக் கொண்டாடும் வகையில் அரசாங்கம் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. குறிப்பாகப் பாடசாலைகளில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான நிகழ்வுகள் நேற்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. ''சமாதானம்'' என்ற சிந்தனை மனித மனங்களில் விதைக்கப்பட வேண்டியதொன்று. அதனை ஆரம்பிப்பதாக இருந்தால் அது மாணவர்கள் மத்தியிலேயே முதலில் ஆரம்பிக்கப்படவேண்டும். அவ் வகையில் நேற்றைய தினம் இன மத வேறுபாடின்றி சமாதான நிகழ்வுகள் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் நடைபெற்றுள்ளது.

நாங்கள் சிறியவர்கள் இந்த மண்ணில் சமாதானத்தோடு வாழ விரும்புகின்றோம் என்பதை உணர்த்தும் வகையில் மாணவர்களின் சமாதான நிகழ்வுகள் அமைந்திருந்தன.

இத்தகையதோர் உணர்வு நிலை மாணவர்களிடையே ஏற்பட்டு வரும் இவ் வேளையில் ஜே.வி.பி யினர் நேற்று முன்தினம் சமாதானத்தை எதிர்த்து மாபெரும் பேரணியொன்றை நடத்தியுள்ளனர். அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்தாகி ஒருவருட நிறைவை மகிழ்வாகக் கொண்டாட வேண்டிய நேரத்தில் சமாதான முயற்சிக்கு எதிராக, ஜே.வி.பி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மிக ஆபத்தான தொன்றாகும். அப் பேரணி குறித்து தமிழ் மக்கள் மௌனம் சாதித்து விட முடியாது. ஏனெனில் தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே ஜே.வி.பி ஆழமாக வேரூன்றி உள்ளது. அதனை மேலும் உறுதிப்படுத்துவதாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் அமைந்துள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக அவ்வப் போது ஜே.வி.பி ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி வந்த போதிலும் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி வித்தியாசமானது. அந்தப் பேரணியில் கணிசமான எண்ணிக்கையினர் கலந்து கொண்டுள்ளனர். அதன் துணிவாக அலரி மாளிகைக்குள் நுழையவும் அவர்கள் முற்பட்டுள்ளனர்.

எனவே கடந்த ஒருவருட சமாதான முயற்சியில், பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியின் கை ஓங்கியுள்ளமை பேராபத்தானது. இது விடயத்தில் அரசு மிகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியைக் குழப்பும் நடவடிக்கைகள் தென்னிலங்கையில் தீவிரமடையும்.

# பிரச்சினைகள் பல எழுந்த போதிலும் அமைதி முயற்சி தோல்வியுறாது

## கலாநிதி சுமணசிறி லியனகே

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒஸ்லோவில் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் நிகழ்ந்துள்ள சில சம்பவங்களையடுத்து இந்தப் பேச்சுக்களின் முன் னேற்றம் பற்றி சில வட்டாரங்களில் சந்தேகங்கள் எழுந்திருப்பது தெரிந்ததே.



ஒஸ்லோவில்சமஷ்டி அமைப்பு முறை பற்றி ஆலோசிப்பதற்கு தயாராய் இருப்பதாக புலிகள் அறிவித்திருப்பதையடுத்து இவ் அமைதிப் பேச்சுக்களில் ஒரு பெரும் திருப்பு முனையாக அமையப்போகிறதென்று ஆய்வாளர்கள் கருதினார்கள். ஆனால் ஒஸ்லோ பேச்சுக்களையடுத்து நிலைமை மாறத் தொடங்கிற்று. சமீப காலத்தில் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம பெறலாயின.

முதலாவது இயல்பு நிலையை உருவாக்குவதற்கும் பாதுகாப்புக்குமான உபகுழுவிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டமை. இரண்டாவது விடுதலைப் புலிகள் உறுப்பினர் கள் மூவர் கடலில் வைத்துத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டமை. இவர்கள் ஆயுதங்களையும் தோட்டாக்களையும் தொடர்பு சாதனங்களையும் கடத்துவதில் ஈடுபட்டிருந்தார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இந்த இரு விடயங்களுக்கும் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அதிக விளம்பரம் கொடுக்காது போனாலும் இவைகளின் விளைவுகள் பற்றி எவருமே சிந்திக்காமலிருக்க முடியாது.

### எந்த அளவில் பாதிக்கும்

எதிர்காலப் பேச்சுக்களை இந்த சம்பவங்கள் எந்த அளவில் பாதிக்கப் போகின்றன என்பதைப் பொது நோக்கில் இங்கு ஆராய்வதே என் நோக்கம்.

4 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்தில் ஆரம்பமாவதற்கு முன்னர் இரு தரப்புக்குமிடையில் உணர்ச்சிகள் பரபரப்படையத் தொடங்கியிருந்தன. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கிருந்த உப குழுவிலிருந்து புலிகள் விலகிக்கொள்ள முடிவு செய்ததின் விளைவாக இங்கு பரபரப்பு உருவானது. உள்ளூரிலேயே இடம்பெயர்ந்திருக்கும் சுமார் 100,000 மக்கள் மீளக் குடியமரும் வகையில் வலிகாமம் பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டிருக்கும் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று கூட குழுக் கூட்டத்தில் புலிகள் வற்புறுத்தியிருந்தார்கள்.

மனித நேய அடிப்படையிலும் சரியான நிலைப்பாட்டின் படியும் பார்க்கும் போது இது ஒரு நியாய பூர்வமான கோரிக்கையே.

இந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளவும் திரும்பி தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள் விரைவில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படவிருப்பதாக வேறு வட்டாரங்களிலிருந்து நான் அறியக் கூடியதாயிருந்தது.

எதுவானாலும் மீண்டும் போர் தொடங்குமானால் இந்த அதியுயர் பாதுகாப்பு நிலைகளிலிருந்து விலகி விடுவது ராணுவத்துக்கு சாதகமாக இருக்காது என்று கருதப்படுவது இயற்கையே.

பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கையின் பேரில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ராணுவத்தின் நிலைப்பாடு குறித்த அறிக்கையொன்றை தயாரித்து வழங்கினார். ராணுவத்துக்குள்ள அச்சங்கள் மற்றும் அக்கறைகள் பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்த அவர் அதிஉயர் பாதுகாப்பு நிலைகளிலிருந்து ராணுவம் விலகுவதானால் அது புலிகளின் நெடுந்தூரம் ஏவக்கூடிய ஆயுதங்களைக் களைவது போன்ற அம்சங்களுடன் தொடர்புடையதாய் இருத்தல் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இதற்கு புலிகள் கோபத்துடன் பதிலளித்திருந்தனர். எந்த வித ஆயுதக் களைவு பற்றியும் தாங்கள் ஆராயத் தயாராய் இல்லையென்று அவர்கள் கூறியிருந்தனர்.

ஜனவரி 9 ஆம் திகதி அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட கருத்தொன்றில் ''நிரந்தரமான ஒரு தீர்வு இல்லாமல் இந்தக் கட்டத்தில் எமது ஆயுதங்



களைக் கைவிடுவதென்பது தற்கொலை புரிவதாகிவிடும். ஏனென்றால் தமிழர்களின் பேரம் பேசும் சக்தியானது எமது ராணுவபலத்திலேயே தங்கியுள்ளது'' என்றார்.

இந்த இரண்டு கருத்துக்களையும் பார்க்கையில் இரு தரப்பினரும் தமது நிலைகளை இலகுவாக நியாயப்படுத்துவது புரிகின்றது.

### நம்பியாரின் வருகை

பிரச்சினை தீர்க்கப்படவில்லை. முதலில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் மீள் குடியமர்வுகளை ஆரம்பிக்க இரு தரப்பினரும் இணங்கினார்கள்.

இதேசமயம், மேற்படி விடயம் தொடர்பாக நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்று அதன்படி தமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யப்போவதாக இலங்கை அரசு அறிவித்தது. அதன் படி ஓய்வு பெற்ற இந்திய ராணுவத்தளபதி சதீஸ் நம்பியாரை ஆலோசனை வழங்குவதற்கு அழைத்தது. இரண்டொரு நாட்களில் அவர் தமது அறிக்கையை வழங்குவார் என்றும் கூறப்பட்டது. இதற்கிடையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் நம்பியாரின் பக்கச் சார்பின்மை தொடர்பாக சந்தேகத்தைக் கிளப்பியிருந்தார். நம்பியாரின் அறிக்கை இந்தப் பிரச்சினையை தீர்க்க உதவும் என்று கூற முடியாது. எனவே இது ஒரு பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினையாகவே இருந்து வரப்போகிறது.

இது ஒரு மனித உரிமைப் பிரச்சினையாகவிருப்பது மட்டுமல்ல இருதரப்புக்குமே மிக முக்கியத்துவமான ஒரு விடயமாகவும் இருக்கின்றது. (மனிதாபிமான அம்சத்தில் இரு தரப்புக்குமே தீவிர அக்கறை இருக்குமென நான் நினைக்கவில்லை)

### பாரதூரமான விடயம்

இரண்டாவது விடயம் மிக பாரதூரமான ஒன்று. கடந்த காலத்தை நாம் நினைத்துப் பார்த்தால் அமைதி முயற்சிகள் கவிழ்ந்து போவதற்கு முன் இம்மாதிரி நிகழ்வுகளே இடம்பெற்றுள்ளன.

பேர்ளினில் 5 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்களும் நோர்வீஜிய அனுசரணையாளர்களும் இலங்கையில் நெடுந்தீவுக்ப்பால் கடலில் இடம்பெற்ற சம்பவமொன்று பற்றி ஆராயவேண்டியிருந்தது.

மூன்று விடுதலைப் புலிப் போராளிகள் தமது படகுக்கும் தீவைத்து தம்மையும் அழித்துக் கொண்டு விட்டார்கள். இலங்கைக்குள் விமான எதிர்ப்பு ஆயுதத்தையும் நூற்றுக்கணக்கான தோட்டாக்களையும் ரவைகளையும் கடத்திவர முயற்சித்தார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. படகு குண்டினால் தகர்க்கப்படுவதற்கு முன்னர் இரு கண்காணிப்புக் குழுவினர் கடலில் குதித்து மயிரிழையில உயிர் தப்பியிருந்தார்கள்.

இரு தரப்பினர் சார்பிலும் பேர்ளின சர்வதேச ஓட்டல் விடுதியிலிருந்து நோர்வீஜிய தரப்பினர் மிகக் கவனமான சொற்களைக் கொண்ட அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்தச் சம்பவம் இப்போது முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்க மாட்டாதென இரு தரப்பினரும் அறிவித்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு விடுமா? என்று கேட்டால் எனது விடை 'இல்லை' என்பதே. இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று: இரண்டு தரப்பும் மேற்படிச் சம்பவங்கள் குறித்து நடந்து கொண்ட முறையானது தற்போதைய நிலையில் அமைதிப் பேச்சுக்களிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ள விரும்பவில்லை எனபதைக் காட்டி விடுகின்றது. மேலும் அமைதி முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது இரு தரப்புக்குமே பயனளிப்பதாய் இருக்கும் என அவர்கள் கருதுவது போல் தெரிவிப்பது ஒரு ஆய்விலிருந்து வரி விதிப்புக்கள் மூலம் மட்டும் புலிகள் 3 பில்லியன் ரூபாய் வருமானம் பெற்றிருப்பது தெரிய வந்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை நாட்டைப் பொருளாதார ரீதியில்மீட்டெடுப்பதற்கு அனுமதியைப் பேணுவதே வழி. ஒரு வருட கால ஆட்சியின் சாதனையாக அது தனது அமைதி முயற்சியைத் தான் பெருமையாகப் பேசிக்கொள்ள முடியும்.

இரண்டாவது விடயத்தைப் பொறுத்த வரை புலிகள் விக்கட் பிழைத்த நிலையில் இருக்கிறார்கள் என்பது சர்வதேச ஊடகங்களுக்கு கண்காணிப்புக் குழுவினர் விடுத்த அறிக்கையிலிருந்து புலனாகின்றது. எனவே இரு தரப்பும் கட்டி வளர்த்துள்ள பரஸ்பர நம்பிக்கையானது மேற்குறித்த இரு சம்பவங்களால் பேச்சு வார்த்தைகள் தடம்புரண்டு போகாமல் காத்திருப்பதாகக் கருதலாம்.

இம்மாதிரிப் பிரச்சினைகளில் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பது முக்கியமான அம்சமாகும்.

### களநிலைகள்

எந்த ஒரு அமைதி முயற்சியின் வெற்றியும் கள யதார்த்தத்தையும் அழுத்தத்தையும் பொறுத்தே அமையும்.



இப்போதைய பேச்சுக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட நேர்ந்தாலும் தற்போதைய தேசிய கள நிலைகளும் சர்வதேச கள நிலைகளும் இரு தரப்பும் உடனடியாக ஆயுத மோதல்களில் இறங்குவதை அனுமதிக்க மாட்டா.

தேசிய ரீதியில் பார்த்தால் பேச்சுகள் தொடர்வதும் முன்னெடுக்கப்படுவதும் இரு தரப்புக்கும் சில அரசியல் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தியுள்ளன.

### பொது எதிரி

இன்றைய உலக சூழ்நிலையில் யுத்தம் கஷ்டமாகவே இருக்கும். இரண்டாவதாக இரு தரப்பும் எதிர்கொள்ள நேர்ந்துள்ள பொது எதிரியாகக் காணப்படுபவர் இலங்கை ஜனாதிபதியாவார். பிரதம மந்திரி விக்கிரமசிங்காவும் விடுதலைப் புலிகளும் தாம் ஒரு ஆபத்தான பலம் வாய்ந்த எதிரியை எதிர் கொள்ளவேண்டியிருக்கிறது என்பதை அறிவார்கள்.

1978 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு விஸ்தாரமான அதிகாரங்கள் உண்டு. தாம் விரும்பினால் அவைகளை அவர் செயல்படுத்த முடியும்.

இரண்டாவது சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி நடந்துகொண்ட முறையானது அமைதி முயற்சி தோல்வியுறுவதற்குத் தாம் காரணமாக இருந்ததாகக் கருதப்பட்டு விடக் கூடாது என்பது போல் அமைந்திருந்தது.

இலங்கை ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற முறையில் அவர் கடற்படைத் தளபதிக்கு விடுத்த பணிப்புரையில் புலிப் போராளிகள் எழுத்து மூலமான உறுதிப்பாட்டின் மீது விடுவிக்கப்பட வேண்டும் என்றே இருந்தது.

அவர் கூறியிருந்தது, ''இது பாரதூரமான ஒரு நிலைமையைத் தோற்று விக்கப் போகிறது. தற்போதைய பிரச்சினையில் உங்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் பின்வருமாறு,

1.சகல ஆயுதங்கள் தோட்டாக்கள் மற்றும் ராணுவ உபகரணங்களை வள்ளத்துடன் பாதுகாப்புக்குள் எடுக்கவும்.

2.அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் அமைதி பேச்சுக்களை உத்தேசித்து எதிர் காலத்தில் இப்படியான செயல்களில் இறங்க மாட்டோம் என்ற வகையில் எழுத்து மூலம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு புலிப் போராளிகளை விடுதலை செய்யலாம்''

மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் ஏற்பட்ட ஒரு சில மோசமான செயற்பாடுகளைத் தவிர அமைதிப் பேச்சுக்கள் உடனடியாக வீழ்ச்சியுற வாய்ப்பில்லை என்பதை எனது பகுப்பாய்வு புலப்படுத்துகின்றது. இருந்தாலும் ஒஸ்லோவில் நடந்த 3 ஆவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னர

(03ம் பக்கம் பார்க்க)

ஓம்

## தினசரி தியானம்

### பிறரை வெல்லும் வழி

தீயவை உங்கள் உள்ளத்தில் உறைய இடங் கொடுத்தல் கூடாது. ஒருவர் உங்களை வசை பாடினால் என்ன? நான் இந்த உடலல்ல மனமும் அல்ல. நான் அழிவற்ற நிலைபேறுடைய அந்தணன் எனத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். நிந்தித்தவன் நான் இவரைப் பலமுறை நிந்தித்தும் சினம் கொள்ளவில்லை. எதிர்த்துப் பேசவில்லை. நான் இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டியன நிறைய உள்ளன என உணர்ந்து உங்கள் காலடியில் வீழ்வான். வெற்றி உங்களுடையது.

சுவாமி. சிவானந்தர்

# தமிழீழ தேசிய விளையாட்டுவிழா நேற்றைய போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்று வரும் இரண்டாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் யாழினி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஆரம்பமான மன்னார் அணிக்கும் முல்லைத்தீவு ஏ அணிக்கும் இடையிலான 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்துப் போட்டியில் முல்லைத்தீவு ஏ அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லை ஏ அணி 15 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி 11.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 46 ஓட்டங் களை மட்டும் பெற்றுத் தோல்வி யடைந்தது.

முல்லை பி அணிக்கும் மன்னார் அணிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார்அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

திருமலை அணிக்கும் கிளிநொச்சி பி அணிக்கு மிடையில் நடைபெற்ற போட்டி யில் திருமலை அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது.

முல்லைத்தீவு மட்டக்களப்பு அணிகளுக்கிடையில் நடை பெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு அணி 36-21 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (த)

## பொலிஸ்

வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் கூறிவருவது, தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

***தயார் நிலையில் படையினர் இருக்க வேண்டும்***

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத் தான யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் படையினர் எந்நேரத்திலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சில இடங்களில் இரா ணுவம் தனது எண்ணிக் கையைக் குறைத்துள்ளதால் அவர்களது பலம் குன்றியுள்ளது. இதன் காரணமாக ஸ்திரமற்ற நிலையும் அமைதியின்மையும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு.

***புலிகளுக்கு வெளிநாட்டு ஆதரவு உண்டு.***

அரசாங்கத்துக்கு இருப்பது போல் தமக்கும் அதிகாரம் இல்லாமல் இருப்பது காரணமாக விடுதலைப் புலிகள் அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேசுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு சிறந்த தலைமைத் துவமும், வெளிநாட்டு ஆதரவும் இருப்பதை நாம் மறந்து விடலாகாது.

***பொலிஸ் - காவல் துறை இணைந்த புதிய படை வேண்டும்***

இலங்கையில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு இலங்கைப்பொலிஸாரையும் விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல் துறையினரையும் இணைத்து நன்கு பயிற்சியளிக் கப்பட்ட நவீன பொலிஸ் படையொன்றை உருவாக்குவது அவசியமாகும். சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் காலப்பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ஆயுதப்படையினரை பயன் படுத்துவதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகக் கூடும். இலங்கையைப் பொறுத்த வரையில் அமைதி காக்கும் படையினரின் பணி அவசிய மற்றதாகும்.

நாட்டில் அமைதியை நிலை நாட்டும் பொறுப்பு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் உண்டு. இந்நிலையில் அமைதியைப் பேணும் பொருட்டு தமக்கு முன்னே உள்ள பொறுப்புக்களை சுமந்து செல்ல வேண்டும். இரு தரப்பிலும் பிரிவினைவாதம் இருப்பதனால் அதனையிட்டு அவர்கள் வன்முறைகளைத் தூண்டி விடலாம் என்பதால் மிகவும் அவதானமாக இருக்கவேண்டு மெனவும் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே கூறியுள்ளார் (ம)

## மெய்வல்லுநர்போட்டி

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரியின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள் ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் பத்மநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-4)

◙ ◙ ◙

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணியளவில் கல்லூரி அதிபர் க.இராஜதுரை தலைமையில் நடைபெறும்

இந்நிகழ்வுக்கு சட்டத்தரணி ஜனாப் எம்.எம்.சவுறிடீன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வுள்ளார். (ந)

◙ ◙ ◙

(கரணவாய்)

யாழ்.கரணவாய் மகா வித்தியாலய 2003ம் ஆண்டிற் கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் பாடசாலை அதிபர் சி.நற் குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக திரு இ.இராஜேந்திரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் வடமராட்சி) அவர்களும் சிறப்பு விருந்தின ராக செ.சதானந்தம் (முன்னாள் பாடசாலை அதிபர்) அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்(ந-29)

## விஞ்ஞான வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியில் விஞ்ஞான வினாவிடைப் போட்டி இடம்பெறவுள்ளது. (உ)

## புலிகள்...

நீர்கொழும்பு றக்கா நகரைச் சேர்ந்த சுனித் ஆனந்த குணசேகரா என்ற றிசேவ் பொலிஸாரே விளக்க மறியலில் வைக்கப்பட்டவராவர்.

தெல்லிப்பழையில் கடமையாற் றிய பிரஸ்தாப பொலிஸார் முகமாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற வேளை இராணுவச் சோதனைச் சாவடியில் இறங்குவதற்குப் பதிலாக புலிகளின் சோதனைச் சாவடியில் இறங்கியுள்ளார் இதனைத் தொடர்ந்து புலிகளால் கைது செய்யப்பட்டு தமிழீழ காவல் துறையினரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

புரிந்துணர்வு உடன் படிக்கை க்கு முரணான வகையில் பொலிஸ் சீருடையுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தமை சந்தே கத்திற்கு இடமானது என்பதால் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாக தமிழீழ நீதிமன்ற வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன. (த)

## உரும்பிராய் இந்துவில் இன்று

உரும்பிராய் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றம் 2003 இன் ''நட்பு நாடலும் நண்பகல் விருந்தும்'' இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் த.கௌதமன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர் கு.திருக்குமரன் பிரதம விருந்தி னராக கலந்துகொள்வார். (த)

## இன்று மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள மனிதநேய அமைப்புக்களைச் சேர்ந்த தலா ஒவ்வொரு பிரதிநிதியை இன்று முற்பகல் 10 மணிக்கு கோவில் வீதியில் உள்ள மனிதநேய அமைப்புக் களின் ஒன்றிய அலுவலகத்திற் குச் சமுகமளிக்குமாறு தலைவர் சு.பரமநாதன் அறிவித்துள்ளார்.

இன்று மனித நேய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் சிலமணிநேர குடா நாட்டு ஸ்தம்பிதப் போராட்ட முடிவில் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் அலுவல கத்தில் மகஜர் கையளிக்கும் பொருட்டு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (உ-3)


## சிறு விளம்பரம்

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி **DIPLOMA IN ENGLISH, MEDICAL LABORATORY SCIENCE (LONDON)** 426(302) K.K.S வீதி, யாழ்ப் பாணம்.

பிளாக் வீதி, சங்கானை

(6565)


## கண்ணீர்...

கதிபற்றி பாப்பா அங்கு விபரித்தார் இதனைத் தொடர்ந்து பொலிஸ் அணியினர் முல்லைத் தீவு கொக்காவிலிலுள்ள இராணுவத்தினரின் சடலங்கள் எரியூட்டப்பட்ட இடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு தாக்குதலின் போது உயிரிழந்த இராணுவத்தி னரின் சடலங்களை பொறுப் பேற்பதற்கு அப்போதைய அரசு மறுப்புத் தெரிவித்ததையடுத்து சுமார். ஆயிரம் சடலங்கள் பூரண இராணுவ மரியாதையுடன் எரியூட்டப்பட்டமை தெரிந்ததே. (த)

## யாழ்.குடாநாடு

வரை குடாநாடு முற்றாக ஸ்தம்பிக்க உள்ளது.

இந்த ஸ்தம்பித நிலைக்கு யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

குடாநாட்டு மக்கள் தமது அதிருப்தியை வெளிக்காட்டும் வகையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை இன்று காலை 10.00 மணிவரை நிறுத்தியும் போக்குவரத்து மற்றும் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் செயற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்ய உள்ளனர் (வ)

## கண்காட்சி

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் உடையமைத்தல் தொழில்திறன் கண்காட்சி அதிபர் திருமதி இ.குட்டித்தம்பி தலை மையில் இன்று நடைபெறவுள் ளது.

இத் தொழில்திறன் வடம ராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகுப்பிள்ளை ஸ்ரீபதி நிகழ்வின் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்ளவு ள்ளார். (உ-52)

## வீடியோ நாடகக் காட்சி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்திறன் அரங்க இயக்கத்தினர் ஆடியபாதம் வீதி திருநெல்வேலி என்ற முகவரியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் ''தேட்டம்'' என்ற பெயரிலான நாடக வீடியோப் படக் காட்சியை நடத்தவுள்ளனர். இத் தொடரில் இன்று முற்பகல் பத்து மணிக்கு குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ''வேள்வித் தீ'' என்ற நாடகப் பிரதி காண்பிக்கப்படவுள்ளது. (உ)

## கண்ணீர் அஞ்சலி

வலி மேற்கு முன்னாள் பிரதேச செயலரும்
தற்போதைய யு.என்.எச்.சி.ஆர் நிறுவன இணைப்பாளரும்
தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினருமான



அமரர்

**கார்த்திகேசு சந்திரராசா**

**தந்தை செல்வாவின் தானை**
**தளபதி அமிர் வழி நின்ற**
**தலைவரே! உமது மறைவினால்**
**நாம் மனம் உருகுகின்றோம்**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

பிரதான வீதி
வழக்கம்பரை

கலியுகன் தொலைத் தொடர்பகம்

[6563]


## MEDICAL CHECK UP வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[C/5602]

**நிலையான சமாதானம் என்றும் நிலைத்திட வேண்டி நிற்கின்றோம்**

# HDL-HUDEC MCR PROJECT

***MANUFACTURERS OF MCR SEMI - SHEETS***

***AGENTS FOR PARRY TECHNOLOGY & MACHINERY***

மென் கொங்கிறீற் கூரைத் தகடுகள், சீமெந்து கொங்கிறீற் கற்கள், துளை தூண்கள், தூண்கற்கள் போன்றன தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றது.

14, Mathews Road, Theougu Street, Jaffna.
Tele/Fax : 021-2222571

[C/5790]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.